# வேதநாயகம் பிள்ளை பாடல்களில் வானியியலும் – வான் சொல்லாய்வும்

செ. த ஜாக்குலின்
இணைப் பேராசிரியர் , அகராதியியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

62

**கட்டுரைச் சுருக்கம்**
மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் ஆற்றல் வாய்ந்த படைப்புகள் பல்வேறு அறிவியல் நுட்பங்களை ஆழமாகத் தருகின்றன. அறிவியல் கூறுகளில் ஒன்றான வானியல் தொடர்பான அவரின் கருத்துகளை ஆராய்ந்து அவரின் இயற்கை நலம்மிக்க புலமை நலனைச் சிறப்பிப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள் :** வானியல் – பொருளாய்வு, வான் – சொல்லாய்வு, இலக்கணங்களில் வானியல் பதிவுகள்- செங்கதிர்- காலைப்பொழுதும் கதிரவனும் - ஒளிப்பரவல் - மழைக் குறியீடு- காலக் கணக்கீடும் திங்களும்.

**முன்னுரை**

பொதுவாக அறிவியல் என்பது வேதியியல், இயற்பியல், மருத்துவம், வானியல், தாவரவியல், விலங்கியல் போன்ற பல்வேறு துறைகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. இவற்றுள் விண்வெளியின் பல்வேறு கூறுகளை அறியத் துணை செய்வது 'வானியல்' என்னும் துறையாகும். வானியல் பகுப்பு, வளர்ந்துவரும் தனித்துறையாக விளங்குவதாலும் பல எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டும் அடித்தளத்தைக் கொண்டிருப்பதாலும் பிள்ளை அவர்களின் கவிதைகளில் புலப்படும் வானியல் தொடர்பான செய்திகள் இக்கட்டுரையில் எடுத்து இயம்பப்பட்டுள்ளது.

**வானியல் - பொருளாய்வு**

வானவெளி என்பது பரப்பளவு மிகுந்த, நெடிய, பல்வேறு விண் பண்புகளைப் பெற்ற கூறாகத் திகழ்கிறது. இதன் நெடுமை கருதியே 'வான்' என்னும் சிறப்புப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அகன்ற பகுதியைக் கொண்டிருத்தலும் வெண்ணிறம் பெற்றிருத்தலும் 'வான்' என்னும் பெயர் அமையத் துணை செய்துள்ளன.

**"வால் என்பதன் ஈறுமாறுதான் வான். வால் என்பது வெண்மை என்றும் ஒளி என்றும் நெடுமை என்றும் பொருள்படும்.**

**வான் – சொல்லாய்வு**

வான், வானம் பெயர்ச்சொல்லாக பயன்படுத்தும் போது மழையைக் குறித்துள்ளது. உரிக்க சொல்லாகப் பயன்படுத்தும் போது பண்பை உணர்த்தும் பெயராக வருகிறது. வான் என்னும் சொல் தமிழிலக்கியங்களில் பெயர்ச்சொல்லாகவும் , உரிச் சொல்லாகவும் கையாளப்பட்டுள்ளது.

வான் என்னும் சொல் நன்மை, பெருமை, அழகு போன்ற விளக்கங்களையும் வானவெளியின் உள்ளடக்கங்களையும் தெளிவுபடுத்துகிறது. பயன் தன்மை, போன்ற

நன்மை, பெருமை, அழகு, வலிமை, நேர்மை, உயர்வு என்ற அடிப்படைப் பொருண்மைகளை உடைய 'வான்' என்னும் சொல் தேவருலகு, அமுதம், வானுலகு போன்றவற்றைக் குறிப்பதுடன் வான் மண்டலமாகிய விசும்பாகிய வானத்தின் இயல்பு. அதிலிருக்கும் காற்று, மேகம் ஆகியவற்றின் தன்மை பெற்றதே வானியல் என்பர்.

**தொல்காப்பியத்தில் விண் என்னும் சொல்**

பழந்தமிழின் முதல் இலக்கண நூல் எனப் போற்றப்படும் தொல்காப்பியம் 'விண்' என்று குறிப்பிடுகிறது. வானத்தைக் காலப் பெயராகவும் இயற்கை நிலையாகவும், ஐம்பெரும் இயற்கைக்குரிய சொல்லாகவும் இவ்வியற்கைக் கூற்றுச் சேர்க்கையில் தலைமையிடம் பெற்றதாகவும் குறிக்கிறது.

**விண் என வருஉம் காலப்பெயர் (தொல்.சொல். 305)**

என வானத்தையும்,

**குயின் என் கிளவி இயற்கை ஆகும் (தொல்.சொல். 335)**

என மேகத்தையும்,

**வளி என வருஉம் பூதக் கிளவி (தொல்.சொல்.241)**

எனக் காற்றையும்,

**நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல்.பொருள். 63)**

என வளி விசும்பும் என்ற சொல்லால் பயன்படுத்துகிறது.

**செங்கதிர்**

ஞாயிறு பற்றிய வருணனைகள் வேதநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களில் பலவற்றில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடல்களிலும் ஞாயிற்றின் புற வடிவம், தோற்றப் பின்னணி, அக எழுச்சி, ஞாயிற்று இயக்கம், செயல்பாடுகள், வாழ்வித்தல், பரவல், வெப்பக் காரணிகள் போன்ற கூறுகளை அறிவியல் நுணுக்கத்துடன் குறித்துள்ளார்.

சூரியகாந்தி மலரை ஒரு மங்கையைப் போலக் கற்பனை செய்து அன்பொழுக 'அடியே!'. 'பூமகளே!', 'அம்மா!' எனப் பலவாறாக அழைத்து மகிழ்கிறார். காலையில் ஞாயிற்றுக்கதிர் முகம் காணச் சூரியகாந்தி துடிப்பதையும் கண்கூசும் ஒளியில் மகிழ்வுடன் அம்மலர் மகிழ்ந்திருப்பதையும் மாலையில் ஞாயிறு மறைந்ததும் மனங்கலங்கித் தவிப்பதையும் கருத்தும் அறிவியலும் உணர்வும் பிணைகின்ற வகையில் கவிதையாக்கம் செய்துள்ளார்.

**உதயசூரியன் சோமன் தாரகை**

**உன் முன்னே மின்மினியே**

**நிதி நவமணி என்னும் குப்பைகள்**

**நிகருமே உனை இனியே**

**காலைப்பொழுதும் கதிரவனும்**

ஞாயிறு தோன்றும் விடியலில் தாமரை மலர்வதும், வண்டுகள் மொய்ப்பதும், பசும்புல் நுனியில் பனி போர்த்தியிருப்பதும். காகம் கரைவதும், கோழி கூவுவதும் எனப் பலவிதத் தொடர் நிகழ்வுகளைப் பட்டியலிடுகிறார் கவிஞர். சோர்வின்றிக் காலையில் ஒளியுடன் தோன்றி, அஃறிணைகளுக்கே புத்துணர்ச்சி பெறும் வழிவகையைக் கவிஞர் சொல்கிறார். சோம்பல் வாழ்வில் திளைக்காமல் புத்தெழுச்சியுடன் உயர்திணை மாந்தர்கள் இனிய காலைப் பொழுதைத் தொடங்கிடவேண்டும் என்ற தம் விருப்பை ஞாயிற்றைக் குறியீடாகக் கொண்டு கவிஞர் கவிதையாகத் தருகிறார்.

**சூரியனைத் தூண்ட அகன்றீரோ – அந்தர்**

**சோமனுக்கு ஒளிதரச் சென்றீரோ?**

**பாரினைப் புரட்டியே நின்றீரோ - அதில்**

**பகல் இரவுண்டாக்க முயன்றீரோ**

**காரிலிருந்து களமழை சொரிந்தீரோ**

**கற்பத்தில் சிசுக்களையே புரிந்தீரோ**

**சாரும் பல்லுயிர்க்கு உயிராய் விரிந்தீரோ**

**சர்வலோக காரியம் செய்து திரிந்தீரோ**

இயற்கையை இணைத்து மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் கவிஞர்களுக்கே உரிய பண்பை இப்பாடலில் புலப்படுத்தியுள்ளார் கவிஞர்.

**ஒளி பரவல்**

ஞாயிற்றைக் குறிக்கும் இடங்களில் பெரும்பாலும் ஞாயிற்றின் ஒளி வெள்ளத்தையும் பிரம்மாண்டத்தையும் பெரும்பரப்பில் அது உலா வருவதையும் வியந்து போற்றுகிறார் கவிஞர். வியப்புமிக்க வானவியல் என்னும் சொல்லுக்கு விளக்கம் தரும் ஆய்வாளர்கள், வான் என்பதை 'அகன்ற வெளி' எனப் பொருள் கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**"வியல் என்பது 'வியன்' எனத் திரிந்து பின் 'வான்' என ஆக்கம் பெற்றது. வியன் >வியான் >வான் - மிக அகன்ற வெளி**

எனக் குறிப்பிடுவர்.

பரந்த, அகன்ற வெளியில் வலம்வரும் ஞாயிற்றின் பல்வேறு கூறுகளைச் சிறப்பித்துப் பாடுகிறார் கவிஞர். அண்டம் முழுவதும் ஒளி வீசித் திகழவும், காய்ந்த மரங்கள் துளிர்க்கவும் வாய்ப்பளிப்பதும், மலைகள்மகிழ்ந்து ஆடிப் பாடவும், பயன்படாமற்போன கிணறு நீர் பொங்க வசதி தருவதும், நீர்நிலைகளில் மலர்கள் மணம்வீசச் செய்வதும் காடு செழிப்பதும், புதுமைகள் பலவற்றைத் தோற்றுவிப்பதும் ஞாயிறு என்னும் வானியல் சார்ந்த விண் பொருளால் விளைவதைப் பெருமிதத்துடன் கவிஞர் பாடுகிறார்.

**நீவிய அண்டங்கள் -மேவி ஆகாயத்தில்**

**நிற்கச் செய்தாய் நீயே -என்தன்**

**நெஞ்சம் உள் தாளினைக் கஞ்சம் பதிந்திட**

**நீ வரம் ஈவாயே - உனக்கு**

**ஓவியமோ இது -காவியம் கொள்ளும்**

**உத்தம எந்தாயே**

**அண்டங்கள் படைத்தளித்து அழிப்போனே – கணம்**

**ஆகப் பல்கோடி காலம் கழிப்போனே**

**தொண்டர் மனத்துயரம் ஒழிப்போனே - நல்ல**

**சுக முத்தரொடு கூடிச் செழிப்போனே**

**அண்டும் வேதநாயகன் அகத்தொளிர் ஜோதியே**

**மண்டும் வினைகளெல்லாம் மாற்றுதல் நீதியே**

**மழைக் குறியீடு**

அகவை முதிர்ந்த பெரியோர்களையும் குழந்தைகளையும் பருவ வேறுபாடின்றிப் சின்னஞ்சிறு பெண்களையும் கவர்ந்திழுப்பது மழை பொழிவாகும். வளரும் இளந்தலைமுறையினருக்கு இயற்கையின் புனைவைப் படிக்கச் செய்வதற்குப் பெரும்பாலும் மழையையே குறியீடாகப் பயன்படுத்தியுள்ளார் கவிஞர். மென்மையான இளம் குழந்தைகளிடம், ஞாயிற்றின் வரவைக் கற்பனை செய்து அவர்களிடையே எழுச்சியூட்டுகிறார். குழந்தைகளின் கல்வி முதலான நிலைப்பாடுகளுக்கும் உள்ள வளர்ச்சிக்கும் பண்பாட்டு நெறிக்கும் தம்பாடற் கலையை ஊடகமாகத் தேர்ந்தெடுத்துஒரு சிறந்த படைப்பாளியாகவே காட்சிதருகிறார் கவிஞர்.

**உன்னை அல்லால்கதி - பின்னிலையென்று உனக்குத் தெரியாதா-நாளும் உற்ற தன் பிள்ளையைப் பெற்ற தாய் தள்ளின் உலகம் சிரியாதா -மேகம் தன்னைப் பயிர் வேண்டுமுன்னே அருமழை தானே சொரியாதா**

மேற்கண்ட கவிதையால் பின்வரும் ஒரு திறனாய்வாளரின் கூற்று உறுதியாவதை உணரமுடிகிறது.

**காலக் கணக்கீடும் திங்களும்**

பண்டைத் தமிழர்கள் திங்களின் வளர்ந்து தேயும் இயல்பை மையமாக வைத்துக் காலத்தைத் கணித்துள்ளனர். வானவியல் தொடர்பான பல ஆய்வுகளைத் திறம்பட மேற்கொண்டு மொகஞ்சதாரோ போன்ற நாகரிகச் சின்னங்களிலும் அவற்றைப் பொறித்துப் பதிவு செய்துள்ளனர். தமிழர் வாழ்க்கை நெறியிலும் பண்பாட்டிலும் திங்களை உள்ளடக்கிய வானியல் சிந்தனைகள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பொதிந்துள்ளன. இதற்குப் பின்வரும் சான்று பொருத்தமாக அமையும்.

**"தமிழர் வானாய்வில் தேர்ந்திருந்தனர். மொகஞ்சதாரோ முத்திரைகளில் கிடைத்த குறிப்புகளால் தமிழர் தொன்மையிலேயே வானநூலை நன்கு அறிந்தனர் என்பது புலப்படுகிறது"**

என்பது அறியத்தக்கது.

**தொகுப்புரை**

தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் வானியல் திறன் மிகுந்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள்சுட்டிக் காட்டுகின்றனர்.வேதநாயகம் பிள்ளை கவிதைகளில் விண்மீன், சூரியன், நிலா,வான்வெளி போன்ற கூறுகள் உவமையாகவும் உள்ளடக்கமாகவும் திகழ்கின்றன. கவிதைத் திறன்மிக்க பிள்ளை அவர்களின் கவிதைகளில் சூரியனும் நிலவும் தக்க இடங்களில் பாராட்டப்படும் பண்பு புலனாகிறது.பிள்ளை அவர்களின் கவிதைகள் செங்கதிர் என்றும், ஒளி விளக்கு என்றும் சூரியனைப் போற்றுகின்றன.கவிஞருடைய கவிதைகளில், காலக்கணக்கீடுசார்ந்த தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. கலைமணி,என்.வி., தமிழ் நாவல் உலகின் தந்தை மாயூரம் வேதநாயகம் பிள்ளை சிவகாமி புக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.2001

2. வேதநாயகம் பிள்ளை, 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' (வேதநாயகம் பிள்ளை பாடல்கள்) அர்ச்.சூசையப்பர் அச்சுக்கூடம், சென்னை. ஆண்டு இல்லை.

3. வேதநாயகம் பிள்ளை'பெண்மதி மாலை' (வேதநாயகம் பிள்ளை பாடல்கள்) தொண்டை மண்டலம் பிரஸ், சென்னை.1901